


# 27 கடைகள்

## சீல் வைக்கப்பட்டன

கோலாலம்பூர், நவ. 18-

6 லட்சம் ரிங்கிட்டிற்கும் கூடுதலான மதிப்பீடு வரியை செலுத்தாமல் இருந்த 27 கடைகளில் இருந்த பொருட்களை கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் அமலாக்கப் பிரிவினர் சீல் வைத்தனர்.

கடந்த புதன்கிழமை பண்டார் துன் ரசாக் பகுதியில் இச்சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக கோலாலம்பூர் மாநகர் மன்றம் வெளியிட்ட ஓர் அறிக்கையில் கூறியது.

1976ஆம் ஆண்டு வீடமைப்பு ஊராட்சித்துறை சட்டத்தின் 148ஆவது பிரிவின் கீழ் அப்பொருட்கள் அனைத்தும் சீல் வைக்கப்பட்டதாக அது கூறியது.

மேற்குறிப்பிட்ட 27 கடைகளும் தங்களின் மதிப்பீட்டு வரியைச் செலுத்த தவறினால் அவர்களின் வியாபார லைசென்ஸ் முடக்கப்படும்.

மேற்குறிப்பிட்ட வரியை செலுத்துவதிலிருந்து அவர்கள் ஒருபோதும் தப்பிக்க முடியாது. மேலும் ஆண்டுதோறும் அதற்கான மதிப்பீட்டு வரியைச் செலுத்தாமல் போனால் அதன் தொகை மேலும் அதிகரிக்கும் வேளையில் அது அவர்களுக்கே கூடுதல் நிதிச்சுமையாக மாறும் எனவும் அந்த அறிக்கை கூறியது.